Employment Opportunities for Tamilians in Foreign Countries.

@ * 220 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to start a Consultancy Service to explore avenues of employment for Tamilians in Foreign Countries; and

(*b*) if so, the details thereof ?

வெளிநாடுகளில் தமிழர்களுக்கு வேலை வாய்ப்புகள்.

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வெளிநாடுகளில் தமிழர்களுக்கு உள்ள வேலை வாய்ப்புகள் பற்றி ஆராய்வதற்கென ஆலோசனை அமைப்பு ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) & (இ) ஆம். ஆய்வு நிலையில் உள்ளது.

Craft and Secondary Grade Teachers.

@ * 221 *Q.*—THIRU M. MASILAMANI (on behalf of THIRU K. ARIVAZHAGAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of Craft teachers and Secondary Grade teachers who were appointed in 'B' Wing Government High Schools after 1973;

(*b*) whether their services have been regularised; and

(*c*) if not, the reasons therefor ?

@ 29-3-1978 ஆம் தேதி வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப் பட்டது.

கைத்தொழில் மற்றும் இடைநிலை ஆசிரியர்கள்.

திரு. மு. மாசிலாமணி (திரு. க. அறிவழகன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 'பி' பிரிவு அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 1973-க்குப் பின் நியமிக்கப்பட்ட கைத்தொழிலாசிரியர், இடைநிலை ஆசிரியர், எத்தனை பேர்?

(இ) அவர்களின் பணி வரன்முறை செய்யப்பட்டு விட்டதா?

(உ) இல்லையெனில் காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) கைத்தொழில் ஆசிரியர்கள்—152.

இடைநிலை ஆசிரியர்கள்—993.

(இ) கைத்தொழில் ஆசிரியர்களில் 124 பேர்களுக்கும், இடைநிலை ஆசிரியர்களில் 648 பேர்களும் பணி வரன்முறை செய்யப்பட்டு விட்டது.

(உ) மீதமுள்ள ஆசிரியர்கள் குறித்து சம்பந்தப்பட்ட சார்நிலை அலுவலர்களிடமிருந்து கருத்துருக்கள் வந்தவுடன் கால தாமதமின்றி அவர்களின் பணியை வரன்முறைப்படுத்த உடன் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. பி. ஆர். தாமஸ்: இந்தப் பணியிடங்களை எல்லாம் நிரப்பியது முதன்மைக் கல்வி அலுவலர் என்று கூறப்படுகிறது. ஆனால் பள்ளிக் கல்வி இயக்குநரின் ஒப்புதல் பெறாத காரணத்தால்தான், காலதாமதம் ஏற்படுகிறது என்று கருதப்படுவதால் அவர்கள் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அவர்களின் பணி வரன்முறை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போது முதன்மைக் கல்வி அலுவலருக்குத் தேவையான அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.